1158

1158
2-55-

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

ஆசிரியர்: இளவழகனார்.

கிளை-7 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத, சித்திரை. 15—4—55 தளிர்-28

# "முல்லைக் கொடி"

## 1. எப்படி முடிந்தது?

எங்கள் ஆசிரியர் தம் குருகுலத்தில் சேர்ந்தவர்கள் பலரும் சேராதவர்கள் சிலருமாக இருநூறு பேருடன் சோழ நாட்டுத் தலங்களுக்குச் சென்று வந்தனர்.

பெரும்பாலோர் சென்னையிலேயே வாழ்பவர்; நடந்தறியாதவர்கள்; அவர்களில் பலர் பக்கத்துத் தெருவிற்குக்கூடக் கையாள் வண்டி (ரிக்ஷா) தேடக் கூடியவர்கள்; சிலர் செல்வத்

[illegible]லம், வி[illegible] முதலியனவும் [illegible]கண்டு வந்தார்கள்; நடை மிகுதி.

எங்கும் சிறந்த வரவேற்புத் தான்; என்றும் காண முடியாத



திருப்பயணத்திற் கலந்துகொண்ட
அருட்பேறுடையார் இருநூற்றுவர்.

சென்றவர்களில் பாதிக்கு மேல் தாய்மார்கள்; குழந்தைகளும் உண்டு; இருநூறு பேரும் இருநூறு நிலையினர் என்று கூடச் சொல்லலாம்.

குருகுலத்தார் தவிர மற்றவர்கள் ஒரு கட்டுப்பாட்டின் கீழ்ப் பழகியவர்களோ ஒரே கொள்கை உடையவர்களோ அல்லர்.

தால் சிறந்தவர்; பல்லாயிரக் கணக்கில் வருமான வரி செலுத்துபவர்; பலர் பல்வேறு அலுவலகங்களில் வேலை செய்பவர்; கைத் தொழில் புரிபவர்;

எல்லாரையும் அழைத்துக் கொண்டு ஒரு நாளைக்குச் சராசரி மூன்று ஊர்கள் வரை வழிபட்டுக் கொண்டு அங்கங்கே

பணிவிடைகள் தாம்; செல்வர்கள் அறிஞர்கள் தகுதியாளர்கள் எல்லாரும் எளிமையாய் இயங்கித் தொண்டு செய்து ஊக்க மூட்டியிருக்கிறார்கள்.

ஆயினும் பயண அமைப்பு முறையினால் நேரத்தில் உணவோ உறக்கமோ இல்லை; வேளையற்ற

வேளையில் அளவுக்கு விஞ்சிய உணவு; அவ்வளவுக்குக் குறைந்த உறக்கம்—ஓய்வு கண்ட நீரில் கண்ட நேரத்தில் முழுகல்; என்றாலும், யாருக்கும் உடம்புக்கு ஒன்றுமில்லை.

மகிழ்ச்சியரய்ப்போய் உருக்கமாகத் திளைத்து, எங்கும் பெருங் கிளர்ச்சிகளை உண்டாக்கி, 'மீண்டும் எப்போது திரும்புவோம் இத்தகைய திருப்பயணம்' என்ற ஏக்கத்தோடேயே திரும்பி வந்து, பிரியமுடியாமல் பிரிந்தவர்கள் என்றால், அன்பர் பலர் 'எப்படிச் செய்கிறீர்கள் இத்தகைய பயணங்களை? இவைகளுக்கெல்லாம் எவ்வளவு மூதல் வைத்திருக்கிறீர்கள்? செல்கின்ற இடங்களிலெல்லாம் இவ்வளவு சிறப்பாக வரவேற்பும் வசதிகளும் செய்கிறார்களே எப்படி?" என்றெல்லாம் கேட்கிறார்கள்.

ஆம், இக் கேள்விகளை எங்களுக்கு நாங்களே கேட்டுக்கொள்



தலங்களை நடு இடமாகக் கொண்டு, பக்கங்களில் ஆருயிர்த் தொண்டு.

ளுகிறபோது, எங்களுக்கே கூட வியப்பாகத்தானிருக்கிறது! எந்தச் செல்வத்தையும் செல்வாக்கையுங் கொண்டு நாம் இத்தகைய பணிகளைப் பலரும் வியக்கச் செய்கின்றோம் என்று எண்ணும்போது எங்களுக்குத் தோன்றுவதெல்லாம் ஒரே ஒரு விடைத்தான். "எல்லாம் செயல் கூடும், என்னாணை, அம்பலத்தே எல்லாம் வல்லான்றனையே ஏத்து" என்பதே அவ் விடை.

அருளடிப்படையில் உண்மை ஈடுபாடு கொண்டு செய்கிற எந்தச் செயலையும், நாட்டவர் மருளவும் கேட்டவர் வியக்கவும் ஏன் செய்ய முடியாது? ஆசிரியர் அவர்களும் சோழநாட்டுத் திருப்



குருகுல இயக்கம்.

பயணத்தைத் தொடங்கிய இல்லைத் திருப்பதியில் நிகழ்த்திய விரிவுரையின்போதே இதனை நன்றாக விளக்கினார்கள்.

சிறந்த அருள் அடிப்படையின்மேல் பணி செய்ய, நிலைமைகளைப் பாராது, 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று இறங்கிவிடுவதனால்தான் 'தன் கடன் அடியேனையும் தாங்குதல்' என்றபடி அருள் வந்து தாங்கிக் கொள்ளுகின்றது.

புல்லியேங்களையும் நல்ல பல பணிகளுக்கு ஆளாக்கிக், காணாதனவெல்லாம் காணவும் கேளாதனவெல்லாம் கேட்கவும் சில இடங்களில் சிலர் குறிப்பிட்டபடி செய்யாதவர்கள் எல்லாங் கூடச் சிறப்புகள் செய்யவும் அருள் வலிவு உந்திவருகின்றது.

அம் மாபெருந் திருவருளையும் அதன்வழி நின்று வாழும் மெய்யடியார்தம் இறைமையும் நாளும் நினைந்து நினைந்து நெகிழ்ந்துருகி வணங்கி, இத் திருப்பயணத் திருமலரைச் சோழநாட்டு வடபகுதிச் சீரடியார் திருவடி மலர்கட்கு எங்கள் அன்புக் காணிக்கையாகச் செலுத்துகின்றனம் வாழி திருவருள்!

இந்தத் திருப்பயண மலரில் வந்துள்ள எழுத்துக்கள், குருகுல மாணவர்களே எழுதியவை; ஊக்க மிக்க எழுத்தாளர்களாகிய இவர்களுக்குத் திருவருள் மேன்மேல் ஆக்கம் அருளுக என ஆசிரியர் தம் வாழ்த்தினைப் பேரன்புடன் அருள்கின்றனர்.

சோழநாட்டுச் சீரடியார் அனைவர்க்கும் ஏழையேம் வணக்கமும் நன்றியும் உரியன.

—செய்தியாளர்.

# 2. திருப்பயணத் திட்டம்

ஆசிரியர் அவர்களின் பல செய்கைத் திட்டங்களில் ஒன்று சமயகுரவர்களாகிய நால்வர் பெருமக்களின் பாடல்களைப் பெற்ற திருவூர்களை யெல்லாம் ஒரு முறையேனும் ஒன்றுவிடாமல் அன்பர்களுடன் திருக்கூட்டமாகச் சென்று வழிபட்டு வரவேண்டும் என்பது.

அதனை அவர்கள் பகுதி பகுதியாகப் பிரித்துக்கொண்டு, ஆண்டுக் கொருமுறை, தம்முடைய ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உரிமைப் பதியாகப் போற்றி வரும் திருக்கழுக்குன்றத் திருப்பதியின்கண் ஆளுடைய அடிகள் திருநாளாகிய ஆனி மகத்தின்போது நடைபெறும் திருமுறைப் பெருவிழாவுக்கு முன், நிறைவேற்றி வருகிறார்கள்.

திருப்பயணக் காலத்தில் வழிபாட்டை மட்டும் செய்வது என்று இல்லாமல் அதனோடு இன்றியமையாத தொடர்புடைய ஆருயிர்த் தொண்டையும் இயன்றவரை தம் மன மொழி மெய் என்னும் முக்கரணங்களாலும் செய்வது என்னும் குறிக்கோளையும் கொண்டிருக்கிறார்கள். அக்காலத்தில், அவர்கள் திருக்கூட்டத்தோடு அங்கங்கே செய்கிற ஊர்வலங்கள, விளக்கவுரைகள், சான்றாண்மைச் சொற்பொழிவுகள் முதலியன மக்களுக்குப் பெருங் கிளர்ச்சியையும் நல்ல தெளிவையும் கொடுக்கின்றன.



ஊர் தொறும் வழிநடந்து செய்யும் வழிபாடும் ஆருயிர் தொண்டும்.



ஆசிரியர் வழிச்செலவு (இயக்கக் கொடி ஏந்திய வண்ணம்.)

சிறக, 1952-ல் தொண்ட நாட்டுத் திருப்பதிகளையும் 1953-ல் நடு நாட்டுத் திருப்பதிகளையும் வழிபட்டு முடித்த அவர்கள், சென்ற ஆண்டு 1954-ல் சோழ நாட்டுத் திருப்பதிகளை வழிபடத் தொடங்கி 3-6-54 முதல் 27-6-54 வரை தில்லை முதல் குடந்தை வரை சென்று 78 பாடல் பெற்ற தலங்களையும் இடையிலுள்ள சில வைப்புத் தலங்களையும் வழிபட்டு மீண்டார்கள்.

இவ்வாண்டு 1955-ல் ஏப்ரல் திங்களில் சோழநாட்டுத் திருப்பயணத்தில் மற்றொரு பகுதியை மேற்கொள்ள இருக்கிறார்கள்.

இனிவரும் ஆண்டுகளில் முறையே எஞ்சும் சோழநாட்டின் பகுதியையும், பாண்டி நாடு, கொங்கு நாடு, சேர நாடுகளிலும், ஈழ நாடுகளிலும் வட நாடுகளிலும உள்ள திருப்பதிகளையும் வழிபட்டுக் கொணடு, அதன் பிறகு அந்த அருள் வலிவோடு, நமதருமைச் செந்தமிழ் நாட்டின் மொழி, கலை, நாகரிகம், வாழ்க்கை, சமயங்களின் உயர்ந்த உண்மையும் நுண்மையுமான ஒண்மைகளை உலகம் தெரிந்து போற்றி உய்கிற வகையில் பரப்புரை செய்ய வெளி நாடுகளுக்கும் செல்ல வேண்டும் என்பது திருப்பயணத்தின் முழுத் திட்டமாகும்.

இத்திட்டத்திற்குத் திருவருள் துணை நிறைவாக இருக்கின்றது என்பது இதுகாறும் அதில் நிறைவேறியுள்ள பகுதியால் மிகுதியும் அறியக் கிடக்கின்றது.

# 3. நடுநிலைத் தொண்டு

இன்று தமிழகத்தில் ஏற்பட்டுவரும் மறுமலர்ச்சிகள் புரட்சிகள் என்னும் பெயர்களில் எழுந்துள்ள இயக்கங்கள், அவற்றிற்குத் துணையாகவும் எதிராகவும் இயங்கிவரும் பல்வேறு கட்சிகள், இவற்றாலாகக் கூடிய விளைவுகள் எல்லாம் பார்க்கிற பலருக்குத் தமிழகத்தின் எதிர்காலம்பற்றிப் பல்வேறு எண்ணங்கள் உண்டாகின்றன. அதற்கு அடிப்படையில்லாமற் போகவில்லை.

ஒவ்வோர் இயக்கத்திலும் உண்மைகள் இல்லாமல் இல்லை; அறிவு பெருகிவருங் காலங்களில் ஐயுறவுகளும் தவறுகளுங்கூடத் தோன்றுவது இயல்புதானே!

உண்மை என்பது எப்போதும் மாறாது, அழியாது; ஆகவே உண்மை விளக்கங்களே அவ்வப்போதும் செய்துவரவேண்டும்; இது கடமை.

இவ்வகையில் பொறுப்பில்லாமலோ, அல்லது பொறுப்பிருக்கிறதென்று வீறிய பகையுள்ளங்கொண்டோ நடத்தல் நலம் பயவாது. நாடு, உண்மைகள் தெளிந்து ஒழுகுவதற்கு ஆவனவெல்லாம் செய்ய முயலவேண்டும்.

---

மெய்யன்புடைய தொண்டர்கள், அறிஞர்கள், செல்வர்கள், சமயத் தலைவர்களின் இணக்கமும் துணையும் மேன்மேல் மிகுதிப்பட்டால் இத் திருப்பயணத்தினால் உலகம் நலம் பெறும் என்பதில் ஐயமில்லை.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!

—குருகுலச் செய்தியாளர்.

ஒன்று, இயக்கமுடையோர் உண்மைக்கு ஊக்கங் கொடுக்க வேண்டும், அல்லது மூடப் பழக்கங்களையே உண்மைகள் என்று கருதிக்கொண்டிருக்கும் எளிய மக்கள் செய்வதே சரியென்றேனும் சாதிக்கவேண்டும். இரண்டும் பொருந்தா எனின், நடு நிலையில் நின்று இருபாலாருக்கும் தர வேண்டிய தெளிவுகளைத் தந்து திருத்த வேண்டியவைகளைத் திருத்தி முன்னேறச் செய்ய வேண்டும்.

இவைகளையெல்லாம், தக்கவர்கள் செய்யவேண்டும்; வேறு யார் செய்வது?

ஏதும் அறியாப் பொதுமக்கள் தாம் போன வழியே போகின்றார்கள்; ஓரளவு கற்றுச் சிறிது தலையெடுப்போர், எடுத்ததை எல்லாம் தம்முடைய போக்கிலேயே முடித்துக், கண்டித்துவிடுகின்றார்கள். இடையிலுள்ளோர், எல்லாத் துறையிலும் சமயத் துறையிலுங்கூடக் குழப்பம் கொள்ளுகின்றனர்.

கொள்கைகளோ தெளிவாக இருக்கின்றன; நடுநிலை நின்று உண்மைகளைக் காட்டித் தெளிவு தரும் தொண்டே இக்காலத்துக்கு மிகவுந் தேவை.

'இவைகளையெல்லாம் தெளிவுபடுத்தக்கூடிய சூழ்நிலையே இல்லை, என்ன செய்வது? அடிப்படையே ஆடிக் கிடக்கிறது. நாட்டு அரசியல் அமைதி பெறவில்லை! கல்வித் துறையில் நிலையான ஏற்பாடு இல்லை! மக்கள் பொருளாதாரம் சரியாக இல்லை!' என்றால், அவற்றிற்கான கிளர்ச்சிகளையும் கட்டாயம் செய்யத்தான் வேண்டும்; உயர்ந்த துறையாகிய அருள் நிலையையுந் தெளிவு செய்வித்தல் வேண்டும். ஒன்றுபட்டு, எல்லாக் கட்சிக்கும் இயக்கங்கட்கும் நடுநிலையாக இருந்து, உண்மைகளை ஏன் பரவச் செய்யக் கூடாது?

தமிழ் நாட்டின் கருத்துக்கள், இந்தியா முழுமைக்கும் ஏன், உலகத்துக்குங் கூட, வழிகாட்டும் நிலையில் இருந்தும், சில அடிப்படை நலங்களில் ஆந்திரர் மலையாளிகள்போல் அண்டை நாடுகளில் உள்ளவர்கள் அடைந்துள்ள அளவுகூட முன்னேற்றம் அடையாததற்குக் காரணம், இயக்கங்களை ஒன்றுபடுத்தவும் உலகுக்கு வேண்டிய தெளிவுகளைக் கொடுத்துத் திருத்தவும், நடை தவறுகிற காலங்களில் கண்டிக்கவும் முயற்சிகள் நடவாமையே ஆகும்.

ஆட்சியில் எக் கட்சி இருந்தாலும் அதன் முடிவுகள் இந்த நாட்டை எப்படிப் பாதிப்பதாயிருந்தாலும், பேசாமல் இருந்துவிடலாமா? அப்படியே இந்த நாட்டிலுள்ள மற்ற இயக்கங்கள் எப்படி நடந்தாலும் பாதகமில்லை என்று இருந்துவிடலாமா? அல்லது அவை, நாட்டை எப்படிக் குழப்பினாலும் குழப்பட்டும் என்றுதான் இருக்கலாமா? அல்லது, பழிப்புக்கும் பிறவற்றிற்கும் பயப்படுவதுபோலத் தான் பேசாமல் இருந்துவிடலாமா? நிலைமைகளைத் தெளிவுபடுத்திவருதலே நல்லது.

குருகுலத்தார்க்கும் இதிற் கடமையுண்டு; பிறரைச் சொல்லிக்கொண்டுமட்டும் பொழுது கழித்தல் ஆகாதே! அது கருதிக் குருகுலத்தாரும் சிறு சிறு நடு



மாம்பாக்கம் குருகுலம்.



குருகுலத்தில் நூல் நிலையமும், வழிபாட்டுக் கூடமும்.



குருகுல அச்சகம்

நிலைத் தொண்டுகள் செய்யப் பழகிக்கொள்கின்றனர்.

எங்கள் ஆசிரியர் அவர்கள் தம் அன்பர் மாணவர்களுடன் ஆண்டுக் கொருகால் மேற்கொள்ளும் பாடல் பெற்ற திருவூர் திருப்பயணங்களும், இப்போது சில திங்கள்களாகச் சென்னையில் செய்துவரும் பேட்டைத் தொண்டுகளும் ஓரளவு நடுநிலைமைப் பணி செய்துவருகின்றன எனலாம். பக்களுக்கு நல்ல தெளிவைத் தந்து வருதலே நோக்கமாயிருக்கிறது; இந்நாட்டு அருள் நிலை பற்றியும் தெளிவுக்கு முயல்கின்றது.

திருப்பயணக்காலத்தில் அவர்கள் திருக்கூட்டத்தைப் பார்த்து அதில் ஈடுபடாதவர்களுக்குக்கூட இக் காலத்தில் வியப்புணர்ச்சி ஏற்படாமல் இல்லை.

ஏதோ ஒரு வகையில் நாட்டின் நன்மைக்குக் குருகுலம் (மாம்பாக்கம்) முயன்று வருகின்றது; எல்லாரையும், எல்லா முயற்சியாளரையும் இயக்கத்தவரையும் தம் உடன்பிறப்பினராய் அன்புகொண்டு அவரவர்கள் உண்மைகட்கு ஆதரவு தந்தும் விளக்கம் செய்ய முயல்கின்றது.

இனியவை என்றால்
ஏற்போம் புதுமையை!
ஏற்றவை என்றால்
இகழோம் பழமையை!

என்பது இதன் கருத்து.

உலகுக்கு ஒரு குரு
—திருவள்ளுவர்

உலகுக்கு ஒரு குலம்
—குருகுலம்

—ஆடலரசு.

# 4. சோழநாட்டுத் திருப்பயணம்

எங்கள் ஆசிரியர் 1954 ஜூன் திங்களில் மேற்கொண்ட சோழ நாட்டுத் திருப்பயணம் 3-6-54 வில் தில்லைத் திருச்சிற்றம்பலத் தின்கண் துவக்கப்பெற்று 27-6-54-ல் குடந்தைக் கும்பேசுவரர் திருமுன்னிலையில் முடிவுற்றது.

ஆடவரும் மாதருமாகச் சற்றேறக்குறைய இருநூற்றுவர் இப்பயணத்தில் கலந்துகொண்டோம். எண்பதுக்கு மேற்பட்ட திருத்தலங்களைத் தரிசிக்கும் பெரும் பேற்றினைப் பெற்றோம்.

"சோழ நாடு சோறுடைத்து"; ஆம். அதுமட்டு மன்று; சைவ நற்சமயமுடைத்து, சைவ நன்னெறியுடைத்து, சைவ நல் நீதியுடைத்து, சைவநற் பண்புகளுடைத்து, ஏராளமான சிவாலயங்களுடைத்து, இம்மை மறுமை மும்மைக்கும் வேண்டுவவான எல்லாச் செம்மை நலங்களுமுடைத்து, எனக் கண்கூடாகக் கண்டு பெரு மகிழ்வெய்தினேம்.

எங்கும் தெய்வ ஒளி வீசுகின்றது; சைவ மணம் கமழ்கின்றது.

சைவசமயாசிரியர் 'நால்வர்' பாடல் பெற்ற தலங்கள் எங்கிருப்பினும் சரி, அங்குச் சென்று வழிபட்டு மீள்வது எனும் எங்கள் ஆசிரியர் குறிக்கோளுக்கேற்ப நாடு நகரங்கள், மூலை முடுக்குகள், மேடு பள்ளங்கள் எல்லாம் உலவினேம்; 'எந்தை ஈசன் எம்பெருமான் ஏறமர்க் கடவுள் என்றேத்தி' இறைவனைத் தலங்கள்தோறும் தீர்த்தங்களில் மூழ்கி முறையாய் எங்கள் ஆசிரியர் பெருமானின் அருளுரைகளோடும் வாழ்த்தோடும், வழி பட்டோம்; 'சைவத்தின் மேற் சமயம் வேறிலை' 'சிவனோடொக்கும் தெய்வம் தேடினுமில்லை' என்னும் உண்மைக்குரிய சிவத்தின் சிறப்புப் பண்புகளாகிய காமனை எரித்தலும் எமனை உதைத்தலும் போன்ற வீரட்டானத் தலங்களையும் தரிசித்தோம்.

கிலமங்கை கெகிழும்படி ஆடவரும் மகளிரும், மூத்தோரும் இளைஞரும், குழந்தைகளுமாக இருநூற்றுவர், செல்வர், எளியோர் வாழ்க்கையில் பல்வேறு துறைகளில் ஈடுபட்டவர்கள், பல்வேறு அமைப்புகள் வாய்க்கப் பெற்றவர்கள் தம் நிலைகளை யெல்லாம் மறந்து, எல்லோரும் ஓர் குலம் ஓர் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் போன்று பேதமின்றிப் பழகியும் வீடு, வாசல், மாடு, மனை, மக்கள், சுற்றம் சூழல்களை எல்லாம் துறந்த துறவிகளைப் போன்றும், எங்கோ ஓர் வான உலகில் ஒரே தெய்வச் சிந்தனையோடு சஞ்சரிப்பது போன்ற நிலையில் மூழ்கியும் சிறந்தோம்; நாடோறும் அதிகாலையிலிருந்து நள்ளிரவிற்குப் பிறகுங் கூட எங்கள் வழிபாடு நீளும்;



திருக்கோயிலின் உட்புறத்தில் குருகுலத் தொண்டர் குழாம்.



குருகுல ஆடவர் ஒரு பக்கமும்
குருகுல மாதர் ஒரு பக்கமுமாக,

பல்வேறு கொடிகள் அறிவுரைகள் ஏந்திக்கொண்டு
தலந்தோறும் வீதிவலம் வருகின்றனர்.

எங்கும் சைவ நற்பெருமக்கள் தம் அளவு கடந்த அன்பைச் சொரிந்தனர்; ஆர்வம் காட்டினர்; ஓடோடியும் உழைப்பெடுத்தனர்; பெரு மகிழ்ச்சியோடு வீதிகளில் தண்ணீர் தெளித்து வைத்துத் தோரணங்கள் கட்டியும், திருவிளக்கேற்றி வைத்தும், பூரணகும்பம், யானை, முத்துக்குடை, விருதுகள், மேள தாளங்கள், தேவார இன்னிசைகள், தூப தீபங்களோடு பெருந்திரளாக எதிர்கொண்டு வந்தும் வரவேற்றனர்; வழிபாட்டுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் சிறப்படச் செய்து வைத்து எங்களோடு கூடி இறைவனைத் தொழுதனர்; ஊர்வலங்கள், ஒலிப் பெருக்கிகளோடு ஆசிரியரின் விரிவுரைகள் எல்லாம் ஏற்பாடு செய்தும் வாழ்த்திதழ்கள் படித்துக்கொடுத்தும் இனிப்புகள் பழங்கள் வழங்கியும், சித்திரான்னம், சிற்றுண்டிகள் அளித்தும், தங்குவதற்கு வசதியான இடங்கள் தந்தும் 'இராசோபசாரம்' செய்தனர். பெருவிழாக் கொண்டாடினர்; அவர்களின் ஆர்வமும் அன்பும் கனிவும் களிப்பும், மகிழ்ச்சியும், பெருமிதமும் என்றென்றும் மறக்க முடியாதன;

நாங்கள் ஆண்கள் ஒரு புறமும் மாதர்கள் மற்றொரு புறமுமாக அணி அணியாய் நின்று, திருமுறைகளை ஓதிக் கொண்டு சென்று முறையாய் வழிபடுவதைப் பெருவியப்பாக நோக்கிச் "சிவனடியார்களே! வாருங்கள்! நாங்கள் நால்வர் பெருமக்கள் இப்படிப் பெருந் திரளோடு திருவூர்களை வழிபட்டதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம்; நூல்களில் படித்திருக்கிறோம்; நேரில் கண்டதில்லை; ஆனால், இதோ இன்று அப்படிப்பட்ட சிறந்த பெருங்காட்சியைக் கண்முன் காண்கின்றோம்; இதுவே எங்கள் பிறவியில் பெறத் தக்க பெரும் பேறு!" என விம்மிதத்தோடு கூறி மகிழ்ந்தனர்.

இதோடு நிற்கவில்லை எங்களை வரவேற்பது; பொன்னித் தாயும் தன் அலைக் கரங்களால், அகன்ற இரு கரையும் அன்பு வெள்ளம் புரள ஓடோடியும் வந்து எங்களை அணைத்துக்கொண்டாள்; வாரித் தழுவி முத்தமிட்டு உச்சி மோந்து 'ஆழிக் (பிறவிக் கடல்) கரையில் அல்லல் பட்டு உங்கள் வாழ்க்கைக் கடலைக் கடப்பதற்கு வழிதேட வந்துள்ள ஆர்வமிக்க அருமைக் குழவிகளே! வாருங்

கள்! தென்னுடைய சிவன்
எங்காட்டுக்கும் இறைவனான சிவ
பெருமான் திருத்தலங்களைத்
தரிசித்து அவன் தன் திருத்தாள்
களில் களைப்பாறுங்கள். இதோ
நானும் நீங்கள் செல்லும் இடங்க
டோறும் உங்கள் கூடவே
தொடர்ந்து வருகிறேன் என்
மடியில் அமர்ந்து விளையாடுங்
கள்" என்று வரவேற்றாள்.

திருவாவடுதுறையி லிருந்து
திருக் கோழம்பம் செல்லும்
வழியிலேயே அன்னை 'காவிரி'
ஆடி அசைந்து வந்து எங்களை
இப்படி ஆண்டுகொண்டு வாழ்த்தி
னாள்: அவள் அழகுக் கோலத்
தையும், அவள் அங்கு செய்து
வைத்திருக்கும் அற்புத இயற்கை
எழிலையும், அவளால் விளைந்த
ஆக்கமாக இருமருங்கும் வான
ளாவ எழுந்து ஒன்றோடொன்று
போட்டியிட்டுக்கொண்டு ஓங்கி
நிற்கும் தென்னை, பனை, கமுகு
முதலிய தோப்புகளையும், மா,
பலா, வாழைத்தோட்டங்களையும்,
எங்கும் குளிர்ந்த நிழல் பரப்பிக்
கொண்டு நிலவும் சோலை சாலை
களையும் அளவிட்டு விவரிக்க முடி
யாது. இவ்வற்புத இயற்கை
வனப்புகளைக் கண்டு களித்து
"நடவாய் வாழி காவேரி!" என
அவ் வன்னையைப் போற்றி
வணங்கி அவளிடம் அடுத்த
ஆண்டு இன்னும் பெருந்திரளாக
வருவதாய் வாக்குறுதி கொடுத்து
விட்டு, உள்ளத்தை அங்கு
வைத்து உடலை இங்குக்
கொண்டு மீண்டோம்.

என்னே! இப்பிறவியில்
யாங்கள் பெற்ற பெரும்
பேறு! உள்ளந்தோறும் உவகை
மீதூர்கிறது! மூவேந்தர் காலத்
தமிழகத்தை, தேவாரமருளிய
மூவர் முதலிகள் காலச் சைவ
நற் பண்பாட்டை யெல்லாம்
ஒருங்கே இன்று சோழ நாட்டில்
காணப் பெற்றோம். அக்கால
வள்ளற் பெருமக்களைப்
போன்றே, இன்சொல், இனிய
முகம், ஈவு இரக்கம், இனிய நற்
சைவப் பண்புகள் எல்லாம்
அமையப் பெற்ற பெருமக்கள்
பலரைக் கண்டு உள்ளம் பூரித்
தோம்; ஊக்கமும் உணர்ச்சியும்
பெற்றுச் சிறந்தோம்.

தில்லை, திருவெண்காடு, திரு
நல்லத்து (கோனேரி ராஜபுரம்)
அம்பலவாணர்களின் அற்புதக்
கோலங்களையும், திருகடவூர்
வீரட்டம் (எமனை உதைத்த
இடம்), திருக்குறுக்கை வீரட்டம்
(காமனை எரித்த தலம்) முதலிய
வீரட்டானக் கோயில்களையும்,
திருவீழிமிழலைத் திருமணக்
கோலத்தையும், திருநனிபள்ளி
யின் தக்ஷிணாமூர்த்தி முதலிய
பண்டைத் தமிழரின் அற்புதச்
சிற்பக் கலைத் திறத்தையும் எப்
படி மறக்க முடியும்?

எங்கள் ஆசிரியப் பெருந்
தகை திருப்புன்கூரில் (நந்தனார்
அருள் அடைந்த திருப்பதி) தம்
பசுபோதத்தை நினைந்து உள்ளம்
குழைந்து உருகி உணர்ச்சி
மேலீட்டால் நாத் தடுமாற வாக்
குத் தடைப்பட்டுப் பேச முடி
யாத நிலையில் (அவரை இதுவரை
அப்படி என்றும் கண்டதில்லை)
நின்ற உருக்கமான காட்சியை
மறக்க முடியுமா?

சோழ நாட்டுச் செல்வர்களும்
சைவ நற் பெரு மக்களும் திரு
மடங்களும் காட்டிய ஆர்வம்,
அன்பு, கனிவுகளையும், செய்த
சிறப்புகளையும், உதவிகளையும்
என்றென்றைக்கும் மறக்கவே
முடியாது!

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros,

GENERAL HARDWARE
MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE.

Phone. 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

ELEPHANT KISAN

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.)